**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.59/2024 – PW-1**

| | |
|---|---|
| Name | திரு.மணி |
| Husband/Father Name | துரைராஜ் |
| Village /Area | மின்னல் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கூலி |
| Age | 63 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.07.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 28.06.2021 அன்று மதியம் 02.30 மணியளவில் எனது மகன் பஸ்வான் என்பவரை அவரது நண்பர்கள் பரத் மற்றும் வினோத் ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் அன்வர்கான் பேட்டையில் முஸ்லிம் நிகழ்ச்சிக்காக அழைத்து சென்றார்கள். ஆவதம் பெட்ரோல் பங்க்கற்கு அருகில் வரும் போது அவரை வழி மடிக்கி ஆவதத்தை சேர்ந்த 10 நபர்கள் எனது மகனை மடிக்கி ரோட்டில் நிற்கும் போது கத்தியால் வெட்டியும் கடப்பாறையால் குத்தியும் பெட்ரோல் பங்கிற்கு அருகில் போட்டுவிட்டு சென்றுவிட்டதாக வினோத் மற்றும் பரத் என்பவர்கள் எனது வீட்டிற்கு வந்து சொன்னார்கள். சம்பவம் தெரிந்து நானும் என்னை சேர்ந்தவர்களும் சம்பவம் இடம் சென்று பார்த்த போது எனது மகன் வெட்டு காயங்களுடன் இறந்து கிடந்தார். இது சம்பந்தமாக அரக்கோணம் கிராமிய காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் அதசா.1 ஆக

குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை நான் போலீஸ் விசாரணையிலும் என்னுடைய புகாரிலும் கூறியுள்ளேனா என்றால் நான் எனது மகன் இஸ்லாமிய நிகழ்ச்சிக்கு சென்றாக கூறியிருந்தேன் ஆனால் கிராமிய உதவி ஆய்வாளர் டாஸ்மாக் கடைக்கு சென்று வந்த போது பிரச்சனை ஏற்பட்டது என எழுதிக்கொண்டார். மேற்படி உதவி ஆய்வாளர் எழுதிய பேப்பரில் தான் நான் கையொப்பம் இட்டேன். மேற்படி உதவி ஆய்வாளரே சில நபர்களின் பெயரை கூறி எனது மகனை எழுத வைத்தார். அதில் தான் நான் கையொப்பம் செய்தேன். நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கும் போது இரவு 07.00 மணி இருக்கும். எனது மகன் பஸ்வானுக்கு குடி பழக்கம் உண்டு. எனது மகனுக்கு நல்ல நண்பர்கள் இல்லை என்று சொன்னால் சரிதா்ன. எனது மகனுக்கு எதிராக நிறைய வழக்குகள் நீதிமன்றத்தில் இருந்தது என்று சொன்னால் சரிதான். மேல் ஆவதம் கோபி மகன் லோகேஷ் என்பவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றார் தெரியும். அவர் எங்கள் ஊரில் பஸ் சில் ஏற்பட்ட பிரச்சனையில் லோகேஷின் அண்ணன் தனியார் பேருந்தில் ஓட்டுநராக வேலை செய்து வந்த போது வினோத், அஜித், பஸ்வான் ஆகியோர் குடித்துவிட்டு காமராஜ் சிலை அருகே ஏறி மின்னல் சாவடி இடம் இறங்கனார்கள். பேருந்திலேயே தகராறு ஏற்பட்டது அந்த தகராறில் வினோத் என்பவர் ஓட்டுநரை ஒரு அடி அடித்துள்ளார். அந்த பேருந்தில் பயணம் செய்த 2 இஸ்லாமியர்கள் லோகிஷிற்கு தகவல் கொடுத்து உனது அண்ணனை அடித்துவிட்டார்கள் என்று கூறி அவர் அங்கிருந்து 10 ஆட்களை

அழைத்து வந்து மின்னலில் 2016ல் கலாட்டா நடைப்பெற்றது. அதில் எனது மகன் பஸ்வானுடன் இருந்தவர்கள் ஓடிவிட்டனர். எனது மகன் மட்டும் தனியாக மாட்டிக்கொண்டார். லோகேஷ் என்பவர் எனது மகனை கத்தியால் குத்தினார் திரும்பி இவர் தாக்க முற்பட்ட போது லோகேஷ் உடன் இருந்த நபர்கள் ஓடிவிட்டனர். பஸ்வானும் அவரை சார்ந்தவர்களும் லோகேஷ்யை துரத்தி சென்று அவர் வைத்திருந்த கத்தியை பறித்து அவரை கத்தியால் குத்திவிட்டார்கள். இந்த நீதமன்ற வழக்கு எண் SC.No.15/2024 வழக்கில் எதிரிகளாக நானும் எனது மகன் பஸ்வானும் இந்த வழக்கில் சாட்சியான 2 வது சாட்சி வினோத் என்பவரும் அவரது தந்தை ரகுவும் சேர்க்கப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் போலீஸ் விசாரணையில் 2016 ஆம் வருடம் லோகேஷ் என்வரை நான் எனது மகன் பஸ்வான் எனது உறவினர் ரகு மற்றும் ரகுவின் மகன் விஜய், அஜித் மற்றும் வினோத் ஆகியோர்கள் சேர்ந்து மின்னல் அருகே குத்தி கொலை செய்ததாக நான் கூறினேனா என்றால் இல்லை. மேற்படி வாக்குமூலம் அவ்வாறு போலீசாரால் பதிவு செய்யப்பட்டிருந்தால் அது நான் கொடுத்த வாக்குமுலம் இல்லை என்று சொன்னால் சரிதான். பட்டில் சாட்சியலில் வினோத் எனது தம்பி மகன் (பங்காளி) பரத் எனது மைத்துனர் மகன். ஏகாம்பரம் மகன் பாபு எனது மாமன் மகன். தேவன் மகன் பரத்குமார் எனது தம்பி மகன். எனது மகன் பகவன் . முருகேசன் மகன் சிதம்பரம் எனது தம்பி முறை. துரைராஜ் மகன் தேவன் எனது உடன் பிறந்த தம்பி. சுப்ரமணி மகன் சிங்காரம் எனது மச்சான். பஸ்வான் இறந்த இடத்திற்கு நான் 02.30 மணிக்கு கேள்விபட்டு 10 நிடத்தில் சென்றேன். அங்கு என்னுடன் வினோத் தான் என்னிடம் சம்பவத்தை பற்றி கூறி என்னை இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்து பாதி வழியிலேயே விட்டு

விட்டு சென்று விட்டார். நான் சென்ற 10 நிமிடத்திற்குள் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். ஊர் பொதுமக்களும் கூடிவிட்டார்கள். பெட்ரோல் பங்க் உள்ள இடம் பொதுமக்கள் அதிகம் நடமாடக் கூடிய இடம் என்று சொன்னால் சரிதான். என்னுடைய ஊருக்கும் மேல் ஆவதம் ஊருக்கும் ஏற்கனவே முன் விரோதம் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி முன்விரோதத்தின் காரணமாக போலீசாரே ஒரு புகாரை தயாரித்து என்னிடம் கையொப்பம் பெற்று என்னை சாட்சியம் சொல்ல வைத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்./–திருமதி. கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**